## தேசிய பாதுகாப்பு நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.21 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்

ஆதனம், பொறி, உபகரணம் என்பன ஒவ்வொரு 03 ஆண்டுகளுக்கு அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீள் மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் தேசிய பாதுகாப்பு நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 11,030,000 பெறுமதியான காணிகளும் ரூபா 4,520,000 பெறுமதியான கட்டிடங்களும் 2008 ஆகஸ்ட் 13 ஆந் திகதியின் பின்னர் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருக்காததுடன் 1987 ஆம் ஆண்டின் போது தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த அத்திகதியில் ரூபா 150,000 பெறுமதியான இரத்தினக்கல் பதிக்கப்பட்ட ஒட்டகத்தின் உருவம் அந்த ஆண்டிலிருந்து இன்று வரை மீள் மதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் உருவ 1989 ஆம் ஆண்டின் போது சனாதிபதி செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டதாக எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அதன் பௌதீக உள்ளமை நிதியத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகளிலிருந்து தோன்றிய நிதிசார் விளைவுகள் ரூபா 57,510,514 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 48,835,628 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 8,674,886 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 15,887,298 ஆல் அல்லது 32.8 சதவீதத்தால் அதிகரித்தல் இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

தமது கடமைகளை மேற்கொள்கின்ற வேளையில் காயமடைந்த அல்லது மரணமடைந்த பொலிஸ் படையில் அல்லது ஆயுதப்படைகளின் அல்லது அங்கத்தவர்கள் எவரினதும் குடும்பங்களுக்கு ஏதும் நலன்களை செலுத்துவதை உள்ளடக்கி தேசிய பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு மற்றும் சான்றுபடுத்துவதற்கு அதிக காரணமாக இருப்பது என சபை கருத்தில் கொள்கின்ற வகையில் மற்றும் செயற்பாடுகளுக்கு நிதியத்தின் பணம் சனாதிபதி அவர்களின் பணிப்புரையின் கீழ் ஈடுபடுத்துதல் சபையின் செயற்பாடாக இருந்த போதிலும் வருடாந்தம் உழைக்கும் வருமானத்திற்குரிய நோக்கத்திற்காக பயன்படுத்துதல் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது. கடந்த 05 ஆண்டுகளுக்குள் கிடைத்த வருமானமும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட நலன்புரிச் செலவுகளும் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | கிடைத்துள்ள மொத்த வருமானம் | நலன்புரிச் செலவுகள் | பெற்றுக்கொண்ட வருமானத்தில் நலன்புரிச் செலவுகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| 2012 | 64,988,177 | 7,238,435 | 11.14 |
| 2011 | 49,082,045 | - | 0 |
| 2010 | 75,509,010 | 40,108,739 | 53.12 |
| 2009 | 78,037,379 | 5,500,000 | 7.05 |
| 2008 | 69,726,492 | 21,421,412 | 30.73 |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

இராணுவத்தின் பயன்பாட்டிற்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த நிதியத்தின் 3 வீடுகளுக்காக 2012 ஆம் ஆண்டில் அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 55,500 தொகை

2013 யூலை 19 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இதில் கடைசியாக 2006 ஆம் ஆண்டில் வாடகை திருத்தப்பட்டிருந்ததுடன் 7 ஆண்டுகளுக்கு மிகைத்திருந்தும் மாதாந்த வீட்டு வாடகையை திருத்தம் செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

மீளாய்வாண்டின் போது நிதியத்திற்காக ரூபா 321,835 தொகையான செலவு நடைமுறைக் கணக்கின் மூலம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மாதாந்த சராசரி ரூபா 26,820 ஆக இருந்தது. எனினும் மீளாய்வாண்டு முழுவதும் எதுவித நலன்களும் இன்றி விளைவற்று அந்த நடைமுறைக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்ட நிதியத்தின் மிகைப் பணத்தின் மாதாந்த சராசரி ரூபா 683,794 ஆக இருந்தது. இது ஆக்கபூர்வமாக முதலீட்டில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்திற்கு ஆகக் குறைந்தது 3 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

மேலே (5.1) பந்தியில் குறிப்பிடப்பட்ட பொது நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 ஆம் ஆண்டு மற்றும் அதனை அடுத்துள்ள ஆண்டுகளுக்கு தேசிய பாதுகாப்பு நிதியத்தால் வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேலே (5.1) பந்தியில் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தேசிய பாதுகாப்பு நிதியத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன்

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டம்

முன்னைய ஆண்டுகளைப் போல் மீளாய்வாண்டின் போதும் கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தன் செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) மிகைநிதிகளை முதலீடு செய்தல்

**பின்னிணைப்பு - 01**

**தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவு தொடர்பான கூற்று**

| **வருமானம்** | **2012** | **2011** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| நன்கொடை | 39,820 | 20,986 |
| முதலீட்டு வட்டி | 64,282,357 | 48,395,059 |
| வீட்டு வாடகை | 666,000 | 666,000 |
| | 64,988,177 | 49,082,045 |
| **செலவுகள்** | | |
| பதவியணியினர் படிகள் | 20,400 | 20,400 |
| நலன்புரிச் செலவுகள் | 7,238,435 | - |
| கட்டிட பெறுமானத் தேய்வு | 184,078 | 193,767 |
| இராணுவத்தினர் நன்கொடை | 34,750 | 32,250 |
| | 7,477,663 | 246,417 |
| செலவுகளை விஞ்சிய வருமானம் | 57,510,514 | 48,835,628 |

**பின்னிணைப்பு - 02**

**பணத்தை முதலீசெய்தல் தொடர்பான கூற்று**

| முதலீடு செய்துள்ள நிறுவனம் | கணக்கு இலக்கம் | முதலீடு செய்த திகதி | காலம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| | | | (ஆண்டு) | ரூபா |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0001/19/88646 | 2012 ஆகஸ்ட் 28 | 01 | 106,340,216 |
| திறைசேரி உண்டியல்கள் | LKA 36413G198 | 2012 யூலை 20 | 01 | 66,413,739 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/54001 | 2012 செப். 21 | 01 | 87,135,436 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/61784 | 2012 யூன் 27 | 01 | 83,190,626 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/61750 | 2012 யூன் 27 | 01 | 78,031,913 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/61768 | 2012 யூன் 27 | 01 | 99,828,736 |
| திறைசேரி உண்டியல்கள் | LKA 36412L281 | 2012 திசெம். 28 | 01 | 45,325,620 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/25753 | 2012 மார்ச் 24 | 01 | 60,863,322 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/10/25058 | 2012 மார்ச் 31 | 01 | 400,000 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/29465 | 2012 யூன் 30 | 01 | 8,604,999 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/61776 | 2012 யூன் 30 | 01 | 11,071,998 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/14085 | 2012 யூலை 16 | 01 | 1,842,620 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/14077 | 2012 யூலை 16 | 01 | 1,842,620 |
| திறைசேரி உண்டியல்கள் | OOOB SCB 11140005 | 2012 ஏப்ரல் 20 | 01 | 5,388,449 |
| திறைசேரி உண்டியல்கள் | OOOB NRP 110490023 | 2012 பெப் 21 | 01 | 3,215,408 |
| மக்கள் வங்கி | 0033-261-070152-4 | 2012 செப் 30 | 01 | 25,013 |
| | | | | 659,520,715 |